இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 19-05-2023

# வான்புகழ் வள்ளுவம்!

'தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களிலும் திருக்குறளும், அதற்கான விளக்கமும் தினமும் இடம்பெற வேண்டும்' என்ற அரசாணையை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது. வான்புகழ் வள்ளுவத்துக்கு மேலும் சிறப்பைச் சேர்த்திருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இதற்கான முறையான உத்தரவை தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு அவர்கள் அனைத்து துறைச் செயலாளர்களுக்கும் அனுப்பி இருக்கிறார். 'அரசு அலுவலகங்களிலும் திருக்குறள் மற்றும் தமிழ் கலைச் சொற்களை காட்சிப் படுத்துக' என்பதுதான் இதன் ஒரு வரிச் செய்தி ஆகும்.

**"தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களிலும் நாள்தோறும் ஒரு பொருளுடன் கூடிய திறக்குறள் கரும்பலகையில் எழுதி வைக்க வேண்டும். ஆட்சி சொல்லகராதியில் இருக்கும் ஆங்கிலச் சொல் ஒன்றையும், அதற்குரிய தமிழ் சொல்லையும் கரும்பலகையில் எழுதி வைக்க வேண்டும். தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலக துறைகள், தன்னாட்சி நிறுவனங்கள், வாரியங்கள், கழகங்கள் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலகங்களிலும் இதனை பின்பற்ற வேண்டும். திருக்குறள் மற்றும் தமிழ் கலைச்சொற்கள் எழுதும் பணியை கண்காணித்து அறிக்கை அனுப்பவேண்டும்" என்று கூறுகிறது தலைமைச் செயலாளரின் உத்தரவு. அனைத்துத் துறைச் செயலாளர்கள், மாவட்ட ஆட்சியர்கள், துறைத் தலைவர்களுக்கும் இந்த உத்தரவு சென்றுள்ளது.**

இதனைத் தொடர்ந்து சென்னை தலைமைச் செயலகத்தில் கரும்பலகைக்குப் பதிலாக மின் பலகை பொருத்தப்பட்டுள்ளது. தலைமைச் செயலகத்தின் நான்காவது நுழைவாயிலில் இது வைக்கப்பட்டுள்ளது. தேமதுரத் தமிழோசை அலுவலகங்கள் அனைத்துக்கும் பரவும் வகை செய்யப்பட்டுள்ளது.

**'உங்கள் மதம் குறள் மதம், உங்கள் நெறி குறள் நெறி என்று சொல்லுங்கள்' என்றார் தந்தை பெரியார்.**

*** ஆரியரல்லாத இந்நாட்டு மக்கள் அனைவர்க்கும், சிறப்பாக இந்நாட்டுப் பழங்குடிப் பெருமக்களான திராவிடர்கள் அனைவர்க்கும் வள்ளுவர் 'திருக்குறள்' ஒரு பெரிய செல்வமேயாகும். நமது பெருமைக்கும், நெறிக்கும், நாகரிகத்திற்கும் வாழ்க்கை முறைக்கும் எடுத்துக்காட்டாக அதில் பல விவரங்களை நாம் காணலாம். திருக்குறளின் பேரால் திராவிட மக்களின் பெருமையை, திராவிடரல்லாத மக்களுக்கு உணரச்செய்ய முடிகிறது.**

*** நமது சரித்திரத்திற்கும் நாகரிகத்திற்கும் பல இலக்கியங்களிலிருந்தும் பல காவியங்களிலிருந்தும் ஆதாரங்கள் எடுத்துக்காட்ட முடியுமாயினும், அவை பெரும்பாலும் பண்டிதர்களுக்குத்தான் புரியும். அவர்களுக்குத்தான் பயன்படும். ஆனால் திருக்குறள் ஒன்றுதான் பாமர மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் எப்படிப்பட்ட அறிவாளியும் ஏற்கும் தன்மைக்குரிய தக்க ஆதாரமாய் அமைந்திருக்கிறது.**

*** நம் பண்டைத் திராவிட மக்களிடையே இரண்டு பெரியார்களைக் குறிப்பிட வேண்டுமானால் ஆண்களில் திருவள்ளுவரையும், பெண்களில் அவ்வையாரையும் நாம் சிறந்த அறிவாளிகளாகக் குறிப்பிட முடியும்.**

*** திருக்குறள் ஆரியக் கொள்கைகளை மறுக்க, அவற்றை மடியச்செய்ய, அக்கொள்கைகளிலிருந்து மக்களைத் திருப்ப எழுதப்பட்ட நூல் என்றுதான் நான் கருதுகிறேன். சுருங்கக் கூறினால் புத்தர் செய்த வேலையைத்தான் திருக்குறள் செய்திருக்கிறது. புத்த தர்மமும் ஆரியத்திற்கு மாறான தர்மம்தான். அதனால்தான் அது இந்நாட்டு ஆரியர்களால் அழிக்கப்பட்டது. ஆரிய தர்மத்தை எதிர்த்து அழித்து ஒழிப்பதற் காகத்தான் திருக்குறள் பாடப்பட்டதென்பது, அதை ஆராய்ச்சி செய்வோர் எவருக்கும் விளங்காமற் போகாது." என்றார் தந்தை பெரியார். அதனால்தான் திருக்குறள் மாநாடுகளை நடத்தினார். திருக்குறள் நூலைப் பரப்பினார்.**

திருவள்ளுவரையும் அதற்கு அடுத்ததாக புரட்சிக்கவிஞர் பாரதிதாசனையும் பாடப்புத்தகங்களில் வைக்கச் சொன்னார்.

அந்த வரிசையில் குறளை முன்னெடுக்கும் இயக்கமாக எப்போதும் திராவிட முன்னேற்றக் கழகம் அமைந்துள்ளது. 'தீனா மூனா கானா' என்பதை திருக்குறள் முன்னணிக் கழகம் என்று பாடலாகவே எழுதினார் கவியரசு கண்ணதாசன். அதனைப் பாடினார் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன். குறள் 'பக்தராகவே' செயல்பட்டார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

சட்டமன்றத்தில் திருவள்ளுவர் படம் வைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோதே முதலில் சொன்னவர் கலைஞர் அவர்களே. பொதுப்பணித் துறை அமைச்சர் ஆனதும், பேருந்துகளில் திருக்குறளை இடம் பெற வைத்தவர் கலைஞர். மயிலாப்பூரில் இருக்கும் வள்ளுவர் கோவிலைச் சீரமைத்தவர் முதலமைச்சர் கலைஞர். தலைநகர் சென்னையில் வள்ளுவர் கோட்டம் அமைத்தவர் முதலமைச்சர் கலைஞர். குமரி முனையில் 133 அடியில் சிலை அமைத்து வள்ளுவரை வானுயர உயர்த்திக் காட்டியவர் முதலமைச்சர் கலைஞர்.

**தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகள் தலைமையிலான தமிழறிஞர்கள் கூடி உருவாக்கியதுதான் திருவள்ளுவர் ஆண்டுக் கணக்கு ஆகும். கிறித்துவுக்கு 31 ஆண்டுகள் முந்தியவர் வள்ளுவர் என்பதே அது. அதனை அரசுக் கணக்காகவும் 1971 ஆம் ஆண்டு மாற்றியவர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். இன்று திருவள்ளுவர் ஆண்டு என்று போடுவதற்கு காரணம், கலைஞரின் பேனா போட்ட கையெழுத்துத்தான் காரணம். குறளுக்கு உரை எழுதியது அவர் பேனா. குறளோவியம் தீட்டியதும் அவர் பேனா. அத்தகைய கலைஞரின் குறளாட்சியின் தொடர்ச்சியே இந்த ஆட்சி. 'திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு' வழங்கி வருகிறது அரசு. 1330 குறட்பாக்களையும் ஒப்பிக்கும் திறன் படைத்தவர்க்கு பத்தாயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.**

தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை மாநில மொழிப்பாடலாக அறிவித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அதனை இசைத்தட்டாக ஒலிபரப்புவதை விட, வாய்ப்பாட்டாக அனைவரும் பாட வேண்டும் என்று சொன்னது தான் தமிழின உணர்வின் மீட்சியாக அமைந்திருக்கிறது.

ஒரு முறை சென்னை மருத்துவக் கல்லூரியின் தமிழ் மன்றத்தைத் தொடக்கி வைக்கச் சென்றிருந்தார் கலைஞர் அவர்கள். 'உங்களுக்கு நான் புதிய மாத்திரைகளை அறிமுகப்படுத்த வந்துள்ளேன்' என்று சொல்லிவிட்டு நிறுத்தினார். 'ஒரு மாத்திரை அல்ல, 1330 மாத்திரைகள். அதைப் பயன்படுத்தினால் எந்த நோயும் வராது. மேட் இன் தமிழ்நாடு. அதுதான் திருக்குறள்' என்று சொல்லிக் கைதட்டலை அள்ளினார்.

திராவிடவியல் கோட்பாடுகளைக் கொண்ட எல்லார்க்கும் எல்லாம் என்ற ஆட்சி இந்தியாவை ஈர்க்கத் தொடங்கி இருக்கிறது. உலகப் பொதுமறையாம் திருக்குறளை பரப்புதலும் அதில் ஒரு கோட்பாடாகவே அமைந்திருக்கிறது.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (17.5.2023) தலைமைச் செயலகத்தில், கள்ளச்சாராய தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ.சைலேந்திரபாபு, காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) கி.சங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (17.5.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கத்தின் தலைவர் கு.வெங்கடேசன், செயலாளர் சு.ஹரிசங்கர், இணைச் செயலாளர் அ.ஜீவன் ஆகியோர் சந்தித்து, அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 38 சதவீதமாக உள்ள அகவிலைப்படி 1.04.2023 முதல் 42 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்.

### காஸ்ட்ரோ என்ட்ரோலோஜிஸ்ட் டிரஸ்ட் - அப்பல்லோ மருத்துவமனை இணைந்து தயாரித்த

# பெருங்குடல் புற்றுநோய் விழிப்புணர்வு கையேடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, மே 19-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.5.2023) தலைமைச் செயலகத்தில், உலக காஸ்ட்ரோலஜி அமைப்பு (World Gastrology Organisation), தமிழ்நாடு காஸ்ட்ரோஎன்டாலஜிஸ்ட் டிரஸ்ட் (Tamil Nadu Gastroen trologist Trust) மற்றும் அப்பல்லோ மருத்துவமனைஆகியவற்றின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள பெருங்குடல் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு கையேட்டினை வெளியிட்டார்.

இன்றைய நவீன வாழ்க்கை முறைகளால் உலகமெங்கும் பெருங்குடல் புற்றுநோய் ஏற்பட்டு வருகிறது. பெருங்குடல் புற்றுநோய் வராமல் தடுக்கும் வாழ்வியல் முறைகளான சரியான உடல் எடையை பராமரித்தல், முறையான தொடர் உடற்பயிற்சி,புகையிலை மற்றும் மது வகைகளை தவிர்த்தல், அதிக பழங்கள் மற்றும் காய்கறிகளை உண்ணுதல், புற்றுநோய் முன்னெச்சரிக்கை பரிசோதனைகள் மேற்கொள்ளுதல் போன்றவை குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின்போது, அப்பல்லோ மருத்துவமனையின் மருத்துவப் பணிகள் இயக்குநர் மரு.வெங்கடாசலம், இரைப்பை குடல் நிபுணர் மற்றும் துறைத் தலைவர் மரு.கே.ஆர்.பழனிசாமி, இரைப்பை குடல் மருத்துவ ஆலோசகர்கள் மரு.பி.பிரம்மநாயகம், மரு. கார்த்திக் நடராஜன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### ரூ.5.83 கோடி மதிப்பீட்டிலான நலத் திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்து

# சேலம் ஆவின் பால்பண்ணை வளாகத்தில் அமைச்சர் மனோதங்கராஜ் ஆய்வு!

சேலம், மே 19 -

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் சேலம், ஆவின் பால் பண்ணை வளாகத்தில் உள்ள பால்பண்ணை பிரிவுகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். மேலும் ரூ.5.83 கோடி மதிப்பீட்டிலான அரசு நலத் திட்டங்கள் மற்றும் புதிய ஐஸ்கிரீம் வாகன விற்பனைச் சேவையினை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் நேற்று முன்தினம் (17.5.2023) சேலம், ஆவின் பால் பண்ணை வளாகத்தில் உள்ள பால்பண்ணை பிரிவுகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்விற்குப்பின், பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் தெரிவித்ததாவது: -

தமிழ்நாடு முதலமைச்சர் தொலைநோக்குப் பார்வையுடன் பால்வளத்துறைக்கென பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், ஆவின் மேம்பாட்டிற்காக பல்வேறு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, எவ்வாறு ஆவினின் சேவைகளை பலப்படுத்துவது, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு தாங்கள் வளர்க்கும் கால்நடைகள் மூலம் பால் உற்பத்திக்காக எவ்வாறு உகந்த சூழ்நிலையை உருவாக்குவது மற்றும் வாடிக்கையாளர்களுக்கு தரமான பால் மற்றும் பால் பொருட்களை குறித்த நேரத்தில் நியாயமான விலையில் வழங்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பால்வளத்துறையின் மூலம் ஊட்டச்சத்துக்கள் நிறைந்த சத்தான உணவு வகைகள் சீரான விலையில் பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் சுமார் 30,500 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இலட்சக்கணக்கான சங்க உறுப்பினர்கள், விவசாயிகள் ஆகியோரின் வாழ்வாதாரம் பால் மற்றும் பால் பொருட்களைச் சார்ந்தே உள்ளன. மேலும் ஆவின் நிறுவனத்தில் பணியாற்றுகின்ற 30,000க்கும் மேற்பட்ட பணியாளர்களின் வாழ்வாதாரங்களும் பால்வளத் துறையைச் சார்ந்தே உள்ளன.

தமிழ்நாட்டில் உண்மையான வெண்மைப்புரட்சி என்பதை நிச்சயமாக நிறைவேற்றி காட்டுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்கான பணியை நாம் நிச்சயமாக மேற்கொள்வோம். பால்வளத்துறை என்பது மிகப்பெரிய அளவில் பொதுமக்களுக்கு நேரடியாக பலனளிக்கக் கூடிய துறை என்பதனால், அனைத்துத் தரப்பு மக்களின் கருத்துக்களையும் கேட்டு, அதற்கேற்ப திட்டங்களை வகுத்து அனைத்தும் முழுமையாக அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சென்றுசேரும் வகையில் வழிமுறைகளைக் கையாள வேண்டும். இதற்காக ஆவின் நிறுவனத்தின் உட்கட்டமைப்புகளை மேலும் மேம்படுத்துவதன் மூலம் இன்னும் கூடுதலாக செயல்பாடுகளைப் பெருக்க முடியும். இன்றைய தினம் சேலம், பால் பண்ணை வளாகத்தில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பால் குளிரூட்டும்நிலையத்தினை அலுவலர்களுடன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, 2023- 2024ஆம் ஆண்டிற்கான பால்வளத்துறையின் சட்டமன்ற அறிவுப்புகள் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் த. மனோ தங்கராஜ் தெரிவித்தார்கள்.

முன்னதாக, ரூ.34 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக வாங்கப்பட்ட ஆவின் ஐஸ்கிரீம் விற்பனை வாகனச் சேவையினை துவக்கி வைத்தும், 12ஆம் வகுப்பில் அதிகம் மதிப்பெண் பெற்ற சேலம் பால் உற்பத்தியாளர்களின் குழந்தைகளுக்கு முதல் பரிசாக ரூ.10,000/, இரண்டாம் பரிசாக ரூ.5,000/ மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.3,000/ அமைச்சர் மனோதங்கராஜ் வழங்கினார். சேலம் மாவட்டத்தில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினைச் சேர்ந்த 237 பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.72 இலட்சம் மதிப்பீட்டில் கறவை பசு வாங்குவதற்கு கடனுதவிகளும், 190 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பால் உற்பத்தியாளர்களுக்கு தலா ரூ.10,000/ மதிப்பிலான தீவன விதைகளும், தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.2.65 கோடி மதிப்பீட்டில் தானியங்கி பால் சேகரம் செய்யும் கருவிகளும், பால் உற்பத்தியாளர்கள் மற்றும் சங்க உறுப்பினர்களுக்கு ரூ.27 இலட்சம் மதிப்பீட்டில் போனஸ் மற்றும் பங்கு ஈவுத்தொகைக்கான காசோலைகளையும், ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் பால் உற்பத்தியாளர்கள் சங்க உறுப்பினர்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பால் கொள்முதல் கருவிகள் என மொத்தம் ரூ.5.83 கோடி மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட வழங்கினார்கள்.

இந்நிகழ்வின்போது, பால்வளத்துறை ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர் மரு.ந.சுப்பையன், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.கார்மேகம், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன், சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர்இரா.அருள், முன்னாள் அமைச்சர். டி.எம்.செல்வகணபதி மற்றும் பொதுமேலாளர் (ஆவின்) திரு.சி.விஜய்பாபு உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.



அகமதாபாத்தில் முன்னணி ஜவுளி தொழிற்சாலை அரவிந்த் மில்ஸ் லிமிடெட் நிறுவனத்தை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி பார்வையிட்டார். இதில் கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்துறை அரசு முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் கர்ணன், மகாலிங்கம், கிரிதரன் ஆகியோர் உடனிருந்தனர்.